Registered at the G. P. O. as a Newspaper

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National TAMIL DAILY தேசிய தினசரி தபாற் பெட்...

மலர் 3 யாழ்ப்பாணம், பிலவ சித்திரை 13 ஆம் நாள் துல்கஃதா 9 (25-4-61) செவ்வாய்க்கிழமை

இன்ப...

உப...

தயாரிப்ப...

S. V. முருகேசன்

பெங்களூர்–2...

# காரைநகரில் 8 பேர் கைது

## இரு பஸ்களுக்குசேதம்
### வடக்கு, கிழக்கு நிலைமை

கொழும்பு, திங்கள்

**குடிதண்ணீர் ஏற்றிச் சென்ற ஒரு மோட்டாரின் சாரதியும், அதிலிருந்த மற்றவர்களும் தாக்கப்பட்டதன் காரணமாய் காரைநகரில் 8 பேர் கைதுசெய்யப்பட்டு, பொலிஸ் காவலில் வைக்கப்பட்டிருப்பதாய் நேற்று வெளியான பாதுகாப்பு - வெளிவிவகார அமைச்சின் பாராளுமன்றக் காரியதரிசி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவின் அறிக்கை ஒன்று கூறுகிறது.**

"வடக்கு, கிழக்கு மாகாணங்களின் நிலைமையில் கடந்த 23, 24-ம் திகதிகளில் எவ்வித மாற்றமுமில்லை. அரசாங்க நிர்வாகம் சுமுகமாய் நடைபெற்றுவருகிறது. சகலகாரியாலயங்களும் திருப்திகரமாய் இயங்கி வருகின்றன" என்றும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

"ஏப்ரல் 23-ம் தேதி சிறிய சம்பவம் பற்றி அறிவிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் ஆனைக்கோட்டையிலும், திருக்கோணமலைக் கருகிலுள்ள சாம்பல் தீவிலும் 2 இ. போ. ச. பஸ்கள் சேதப்படுத்தப்பட்டன. எவரும் காயமடையவில்லை எவரும் கைது செய்யப்படவுமில்லை. குறித்த பகுதிகள் ராணுவத்தினரால் ரோந்து செய்யப் படுகின்றன.

கடந்த ஏப்ரல் 24-ம் தேதி சுன்னாகத்திலும் சிறியகல்வீச்சு சம்பவம் நடைபெற்றது. பருத்தித்துறை-யாழப்பாணம் ரஸ்தாவில் ஒரு மடம் தீயில் பற்றியெரிந்ததை ராணுவ ரோந்து காரர்கள் கண்டு, அதை அணைத்தனர். யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை ரஸ்தாவில் போடப்பட்டிந்த தடையையும் ரோந்து ராணுவம் அகற்றியது.

மல்லாகம்-சுன்னாகம் ரஸ்தாவில் போடப்பட்டிருந்த தடைகளும் ராணுவ ரோந்துக் கோஷ்டியினரால் அகற்றப்பட்டன.

சுன்னாகத்தில் ராணுவ ஜீப் ஒன்றின் முன்புறக் கண்ணாடி கல்வீச்சினால் சேதமடைந்தது. குறித்தபகுதி சோதனையிடப்பட்டது. எவரும் கைது செய்யப்படவில்லை" என்றும் அறிக்கை தொடர்ந்து கூறியிருக்கிறது.

சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதில் ராணுவ ரோந்துக் கோஷ்டிகள் தொடர்ந்து முயற்சி செய்து வருகின்றன என்றும் அறிவிக்கப்படுகிறது.

அல்ஜீரியா

## ஜெனரல் டிகாலுக்கு 1000 துருப்புகள் பாதுகாப்பு
### பிரான்ஸ்மீது படையெடுப்பு ஆபத்து குறைந்துள்ளது

பாரிஸ், ஏப்ரல் 24

**அல்ஜீரியாவிலிருந்து பிரான்ஸ்மீது படையெடுப்பு அபாயம் குறைந்துவிட்டதென இன்று பாரிஸில் அறிவிக்கப்பட்டது. விமான நிலையங்களில் போடப்பட்டிருந்த தடைகளும் அகற்றப்பட்டுவிட்டதென்றும் ஆனால் பிரென்சு படை விமானங்களின் நடமாட்டம் கண்காணிக்கப்படுவதாயும் அறிவிக்கப்பட்டது.**

அல்ஜீரியாவிலிருந்து 1500 ஆயுதப்படையினர் விமானங்களில் பாரிசுக்குப் புறப்பட்டிருப்பதாக முன்பு கூறப்பட்டது. பிரெஞ்சுப் பிரதமர் நேற்று விடுத்த எச்சரிக்கையில் உத்தரவுக்குப் பணியாத விமானங்களைச் சுட்டுவீழ்த்தும்படி கேட்டுக்கொண்டிருந்தார்.

ஜெனரல் டி காலைப் பாதுகாக்க நேற்று அவரது மாளிகையைச் சுற்றி 1000 துருப்புக்கள் நிறுத்தப்பட்டிருந்தன. பிரதமர் வாசஸ்தலம், உள்நாட்டு அமைச்சு ஆகியவற்றில் பெரும் பந்தோபஸ்துக்கள் செய்யப்பட்டிருந்தன.

**முன்வந்தசெய்தி**

பாரிஸ், திங்கள்

அல்ஜீரியாவின் முக்கிய பகுதிகளை புரட்சிக்காரர்கள் கைப்பற்றியதைத் தொடர்ந்து பிரஞ்சு ஜனதிபதி டிகோல் விசேஷ அதிகாரங்களை ஏற்றுக்கொண்டுள்ளார்.

அல்ஜீரியப் புரட்சிபற்றி ஜனதிபதி டிகோல் வானெலியில் பேசுகையில், முன்யோசனையின்றி முட்டாள்தனமாக எடுக்கப்பட்ட நடவடிக்கையென்று குறிப்பிட்டார்.

அல்ஜீரியாவில் இராணுவ முக்கிய இலக்குகளையும் புரட்சியாளர்கள் கைப்பற்றிக் கொண்டனர். கலகக்காரரின் படைகள் பிரான்சில் இறங்கவிடாமல் தடுக்குமுகமாக பிரான்சின் விமான நிலையங்களில் விமானங்கள் இறங்கவும், விமானங்கள் புறப்படவும் தடைசெய்யப்பட்டுள்ளன. பிரான்சின் முக்கிய இலக்குகளில் காவல் பலப்படுத்தப் பட்டுள்ளன.

பாரிஸில் முன்னாள் இராணுவத்தினருட்பட பெருந்தொகையானோர் கைது செய்யப்

(4-ம் பக்கம் பார்க்க)

## பிரதமருக்கு இ. தொ. கா. மகஜர்

கொழும்பு, திங்கள்

மொழிப் பிரச்சினைக்கும் அதனுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கும் உடனடியாகத் தீர்வுகாணவேண்டுமென்று கேட்டுக்கொள்ளும் மகஜரொன்றை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பிரதமர் சிறிமா பண்டாரநாயகாவிடம் சமர்ப்பித்துள்ளது.

## வியாங்கொடை நெசவு கூட்டுறவு ஸ்தாபனம்

கொழும்பு, ஏப்ரல் 24

வியாங்கொடையில் தேசிய நெசவுகூட்டுறவுஸ்தாபனத்தை வருகிற 27-ம் தேதி பிரதமர் ஸ்ரீமதி பண்டாரநாயக்கா திறந்து வைப்பார். 33 ஏக்கர் நிலத்தில் அமைந்துள்ள இந்த ஸ்தாபனம், 4 கோடிரூபாய்க்கு மேற்பட்ட செலவில் அமைக்கப் பட்டிருக்கிறது.

## யாழ்ப்பாண மாவட்டம் அனைத்திலும் ஊரடங்குச் சட்டம் அமுல்

யாழ்ப்பாணம், ஏப். 25

**யாழ்ப்பாணக் கச்சேரியின் அதிகார எல்லைக்கு உட்பட்ட யாழ்ப்பாண மாவட்டமனைத்திலும் ஊரடங்குச் சட்டம் காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரையில் அமுலுக்கு வந்துள்ளதாக, யாழ்ப்பாணத்திலுள்ள இராணுவ அதிகாரி அறிவிக்கிறார்.**

ஏற்கெனவே யாழ்ப்பாண மாநகரசபை எல்லை, காங்கேசன்துறை, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, சாவகச்சேரி இந்த நான்கு பகுதிகளில் தான் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருப்பதாக, இலங்கை வானெலியில் அறிவிக்கப்பட்டதாயும், ஆனால் ஆனைக்கோட்டை, மானிப்பாய் முதலிய இடங்களிலும் மாலை 6 மணிக்குமேல் தெருவில் செல்பவர்கள் கலைக்கப்படுவதாகவும், இதைப்பற்றி நிலைமையைத் தெளிவாக்க வேண்டுமென்றும் நமது காரியாலயத்துக்குப் பல கடிதங்கள் கிடைத்தன.

(4-ம் பக்கம் பாக்க)

## தேயிலை, ரப்பர் தோட்ட வேலை நிறுத்தத்துக்குத் தடை
### வேலை நீக்கம், சிறை, சொத்து பறிமுதல்

கொழும்பு, திங்கள்

1961 ஏப்ரல் மாதம் 17-ம் திகதி பிரகடனப்படுத்தப்பட்ட அவசர கரலச் சட்டத்தின்படி தேயிலை, ரப்பர், தெங்குப் பொருள்கள் தொழில் யாவும் அத்தியாவசிய சேவைகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிட்ட அம்சங்களில் வேலைநிறுத்தம் நடைபெறுமாயின் அது சட்ட விரோதமாகக் கணிக்கப்படும். அப்படி எவரும் வேலைநிறுத்தம் செய்தால் அவர்கள் உடனடியாக வேலையினின்று நீக்கப்படுவது மட்டுமின்றி அவர்களுக்குப் பதிலாக புதியவர்கள் உடனடியாக வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படுவார்கள்.

வேலைநிறுத்தம் செய்பவர்கள் மூன்றுமாதகாலத்துக்குக் குறையாமலும் ஐந்து வருடங்களுக்கு அதிகமில்லாமலும் கடுமையான தண்டனைக்குட்படுவார்கள். இதைவிட 500 ரூபாய்க்கு குறையாமலும் 5000 ரூபாய்க்கு அதிகமில்லாமலும் இவர்களுக்கு அபராதம் விதிக்கப்படும்.

வேலைநிறுத்தம் செய்பவர்கள் தங்கள் உடமைகளை இழக்கவேண்டியும் நேரிடும்.

## 'டாங்கி' தொழிற்சாலை

புதுடில்லி, திங்கள்

டாங்கிகள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையொன்றை ஆரம்பிக்க இந்தியபாதுகாப்பு இலாகா திட்டமிட்டுள்ளதாக பாதுகாப்புமந்திரி திரு. கிருஷ்ணமேனன் இன்று ராஜ்ய சபையில் தெரிவித்தார்.

பிரிட்டனுடனும் ஜேர்மனியுடனும் பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதாகவும் விரைவில் இதுபற்றி இறுதிமுடிவு செய்யப்படுமென்றும் திரு. மேனன் தெரிவித்தார்.

## ஓய்வுபெற்ற டாக்டர்கள் மீண்டும் வேலைக்கு அமர்த்தத் திட்டம்

கொழும்பு, திங்கள்

ஆஸ்பத்திரிகளில் வெளிநோயாளர் பகுதிகளில் வைத்திய அதிகாரிகளாக வேலை செய்வதற்கு ஓய்வுபெற்ற அரசாங்க டாக்டர்களை மீண்டும் வேலைக்கு அமர்த்துவதற்கான திட்டமொன்றை சுகாதார மந்திரி செனட்டர் ஏ. பி. ஜெயசூரியா தயாரித்துள்ளார்.

அரசினர் ஆஸ்பத்திரிகளிலும் வைத்திய சாலைகளிலும் டாக்டர்களின் பற்றுக் குறையை நீக்குமுகமாக சுகாதார மந்திரி இத் திட்டத்தைத் தயாரித்துள்ளார்.

இத்திட்டத்தை வெகுவிரைவில பரீட்சாத்தமாக அமுலுக்கு கொண்டுவர மந்திரி உத்தேசித்துள்ளார்.

## துப்பாக்கிகளை பொலிஸில் ஒப்படைக்க வேண்டும்
### யாழ்ப்பாண மாவட்ட மக்களுக்கு உத்தரவு

கொழும்பு, திங்கள்

யாழ்ப்பாண நிர்வாக மாவட்டத்திலுள்ளவர்கள் தங்களிடமுள்ள துப்பாக்கிகளை இம் மாதம் 28-ந் திகதிக்கு முன்பாக அதிகாரிகளிடம் ஒப்படைத்துவிட வேண்டுமென அவசரகாலச்சட்ட விதிகளின் கீழ் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

லைசன்ஸ் உள்ள துப்பாக்கிகளும் லைசன்ஸ் பெறப்படாத துப்பாக்கிகளும் ஒப்படைக்கப்பட்டுவிடவேண்டுமென்றும், துப்பாக்கிகளை ஒப்படைக்காதவர்கள்மீது நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டு அவர்கள் குற்றவாளிகளாகக்காணப்பட்டால் 3 மாதச் சிறைத் தண்டனை அல்லது 500 ரூபாய் முதல் 1000 ரூபாய்வரை அபராதம் அல்லது சிறைத் தண்டனையும். அபராதமும் விதிக்கப்படும்.

யாழ்ப்பாண நிர்வாக மாவட்டத்திலுள்ளவர்கள் தங்கள் துப்பாக்கிகளை பின்வரும் பொலிஸ் நிலையங்களில் ஒப்படைக்கவேண்டும.

யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, ஆனைக்கோட்டை, கிளிநொச்சி, வல்வெட்டித்துறை, சாவகச்சேரி, கோப்பாய், பருத்தித்துறை, சங்கானை, சுன்னாகம்.

...தா

...நாடு

...NADU·

...ம் பிலவ ஆண்டு
... மீ 13 உ (25-4-61)

...NADU: National Tamil
...aily Post Box 49, Jaffna
...legrams EELA NADU Jaffna
Phone: 389.

# ...றுபான்மையினரின் அச்சத்தை நீக்கவேண்டும்"

## போபாலில் நேரு பேச்சு

### 'வகுப்புவாதம் நாட்டின் மதிப்பைக் குலைக்கும்'

போபால், ஏப்ரல் 24

"சிறுபான்மைச் சமூகத்தினர் பாதுகாப்பாகவும் பயமின்றியும் வாழ்வதற்கு பெரும்பான்மைச் சமூகத்தினர் பொறுப்பாக இருக்க வேண்டும்" என்று பாரதப் பிரதமர் நேரு இங்கு நேற்று மாலை நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் பேசுகையில் கூறினர்.

சிறுபான்மையினரை பெரும்பான்மையினர் ஆதரிக்க வேண்டிய பொறுப்புப்பற்றி வலியுறுத்திப் பேசிய திரு. நேரு, நாட்டைச் சுபிட்சமடையச் செய்ய ஜப்பானியர், ஜேர்மானியர், ரஷ்யர்கள் ஆகியோரைப் பின்பற்ற வேண்டுமென்று கூறினர். "நாட்டின் வளர்ச்சிக்கு வகுப்புவாதம் இடையூறு விளைவிக்கின்றது" என்று கூறிய திரு. நேரு "இன்றைய நவீன உலகில் அரசியலோ, மதமோ இல்லை; விஞ்ஞனமும் ஆத்மீகமும்தான் உள்ளன" என்று ஆச்சாரிய வினோபாபாவே சமீபத்தில் கூறியதைக் குறிப்பிட்டார்.

ஜபல்பூர் கலவரங்கள்பற்றிக் குறிப்பிட்டுப் பேசுகையிலேயே மேற்கண்டவாறு திரு. நேரு கூறினர். ஜபல்பூர் கலவரம் தமக்கு பெரும் வேதனையை அளித்ததாகவும் நாட்டுக்கு அது பெருத்த அவமானத்தை ஏற்படுத்தி விட்டதாகவும் அவர் சொன்னர்.

### வகுப்புவாதம் நாட்டுக்கு கேடு

சமீபத்தில் ஜபல்பூரிலும் மத்தியப் பிரதேசத்தின் சில நகரங்களிலும் நடைபெற்ற வகுப்புக் கலவரங்களின் போது காங்கிரஸ் பிரமுகர்கள் துணிவாக முன்வந்து நிலைமையைச் சமாளிக்காமலிருந்தது, தமக்கு வருத்தமளிப்பதாக திரு. நேரு பிரதேசக் காங்கிரஸ் குழுவினதும் சட்டசபைக் காங்கிரஸினதும் இணைப்புக் கூட்டமொன்றில் பேசும்போது குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:-

காங்கிரஸ் கோழைகளின் இயக்கமல்ல. கடந்த காலத்தில் காங்கிரஸ் கஷ்டமான சூழ்நிலையையெல்லாம் துணிவுடனும் உறுதியுடனும் சமாளித்திருக்கின்றது. தங்களின் கொள்கைகளுக்காக காங்கிரஸ்வாதிகள் தமது உயிரையும் தியாகம் செய்துள்ளார்கள். இங்கு ஒரு காங்கிரஸ் வாதிக்காவது எவ்வித காயமு மேற்படவில்லை. இதிலிருந்து அவர்கள் இந்த வகுப்புக்கலவரம் பரவாமல் தடுக்க எவ்வித பிரயத்தனமும் எடுக்கவில்லை என்பது தெளிவாகின்றது.

வகுப்புவாதம், உலகில் பாரத நாட்டுக்கிருந்த கௌரவத்தைக் குறைத்துள்ளது. கலவரத்துக்குக்காரணம் என்னவாக இருந்தாலும் பெரும்பான்மை சமூகம் அதற்குள்ள பொறுப்புணர்ச்சியை நன்ருகவும் உண்மையாகவும் நிறைவேற்ற வேண்டும்.

முன்னரும் இவ்வித வகுப்புவாதக் கலவரங்கள் மூண்டிருந்தாலும் சமீபத்தில் ஜபல்பூரில் நடைபெற்றது மிக மோசமானதாக இருக்கிறது. மத்திய பிரதேசத்தின் கௌரவத்தையே இந்தக் கலவரம் குறைத்துள்ளது.

"முஸ்லிம்கள் இந்துக்களைத் தாக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு திட்டமிட்டுச் செய்த தாக்குதலையே இந்துக்கள் எதிர்த்தார்கள்" என்பதை, விசாரணை செய்யாமலே முழுப் பொய் என்று நான் கூறுவேன். நூற்றுக்கணக்கான இந்துக்கள் கொலை செய்யப் பட்டதாகப் பொய்ப் பிரசாரம் செய்யப்பட்டதால் மக்கள் பீதி அடைந்தார்கள். இவ்வித ஆதாரமற்ற பொய்ப் பிரசாரங்கள் எவ்வளவோ தீமையை உண்டாக்கியது.

இக் கலவரம் பொதுத் தேர்தல் சம்பந்தமாகத் திட்டமிட்டுச் செய்யப்பட்டதோ என்னவோ தெரியவில்லை. ஆனல், சிலர் தமது சொந்த நலனுக்காகவோ அரசியல் நோக்கத்துக்காகவோ இவ்வித முறையைக் கையாளுகின்ருர்கள் என்பதை மட்டும் கூறலாம். வகுப்புவாதம் நாட்டுக்கு ஒரு பெரிய தலையிடியைக் கொடுக்கின்றது. இது மிக அபாயகரமானதொன்று. இதை வேரோடு களையச் சகல முறைகளையும் கையாள வேண்டும். மற்ற நாடுகளில் அரிதாக இருக்கும் இவ்வகுப்புக் கலவரம் நம் சமூகத்தில் இருப்பதிலிருந்து நம் சமூகம் எவ்வளவு பின்தங்கியுள்ளது என்பதைக் கணித்துக் கொள்ளலாம்.

வகுப்புவாதம் நாட்டின் முன்னேற்றத்தையே குலைத்துவிடும். உலகம் விஞ்ஞானத் துறையில் முன்னேறிக் கொண்டிருக்கையில் நம் நாடு வீணுக இவ்வித வகுப்புக் கலவரங்களில் சக்தியை இழப்பது வீணுகும்.

## அல்ஜீரிய புரட்சி

நாய் வாலை ஆட்டுவது இயற்கை. ஆனல், வால் நாயை ஆட்டுவதுண்டா? அவ்வித விபரீதமான ஒரு நிலைமை அல்ஜீரியாவிலே இப்போது ஏற்பட்டிருப்பதைப் பார்க்கிருேம்!

அல்ஜீரியா வடக்கு ஆபிரிக்காவிலுள்ள ஒரு பிரெஞ்சுக் குடியேற்ற நாடு. அதன் விஸ்தீரணம் 8 லட்சத்து 53 ஆயிரம் சதுரமைல். நம் இலங்கையைப்போல் 34 மடங்கு பெரிது. ஆனல் ஜனத்தொகையோ இலங்கையைப்போல் 95 லட்சம்தான். இதில் பன்னிரண்டரை லட்சம்பேரே குடியேறிய பிரெஞ்சு வெள்ளையர். மற்ற 83 லட்சமும், இஸ்லாமிய சமயத்தவரான அரபுகளும் பெர்பர்களுமே. மற்ற ஆசிய, ஆபிரிக்க நாட்டவரைப் போல் அல்ஜீரிய மக்களும் சுதந்திரத்துக்காகப் பல்லாண்டுகளாகப் போராடிவருகின்றனர். இப்போராட்டத்தில் இதுவரை ஏற்பட்டுள்ள உயிர்ச்சேதம் மிக அதிகம். பிரான்ஸுக்கோ, இது பெரிய மண்டையிடி. அல்ஜீரிய யுத்தத்துக்கு ஆகும் செல்வை அதனல் சமாளிக்க முடியவில்லை. இவ்வளவு சிரமப்பட்டும், அந்தச் சண்டை மேலும் நீடித்துக்கொண்டே போகிறதேயன்றி முடியும் வழியைக் காணவில்லை.

இதற்கிடையே 1957ம் வருடம், பிரெஞ்சு ஆட்சியை வாபஸ்பெற்று, அல்ஜீரியாவுக்குச் சுதந்திரம் அளிக்க வேண்டுமென்ற அல்ஜீரிய தேசிய விடுதலை முன்னணியின் கோரிக்கையை, ஐ. நா. ஸ்தாபனத்தின் அரசியல் கமிட்டி முன் ஆசிய-ஆபிரிக்க நாடுகள் ஒருபிரேரணையாகக் கொண்டு வந்தன. பயனில்லை. பின்னர் மூன்று வருடங்களுக்குமுன் சுதந்திர அல்ஜீரிய அரசாங்கம், பெர்ஹாட்அப்பாஸின் தலைமையில், கெய்ரோவிலே அமைக்கப்பட்டு, பல நாடுகளின் அங்கீகாரத்தையும் பெற்றுள்ளது. பலபல கஷ்ட நஷ்டங்களுக்கும் அடக்கு முறைக்கும் உள்ளாகியும் உறுதியுடன் தங்கள் நாட்டின் விடுதலைக்காக அவர்கள் போராடி வருகின்ருர்கள்.

இதுவரை சுதந்திர அல்ஜீரிய அரசாங்கத்தை அங்கீகரிக்க மறுத்த பிரெஞ்சு ஜனதிபதி ஜெனரல் டிகால், சமீபத்தில், அந்த அரசாங்கப் பிரதிநிதிகளுடன் பேச்சுகள் நடத்தவும் தயாரென்றும் அல்ஜீரிய மக்கள் விரும்பினல் பிரெஞ்சு ஆட்சியிலிருந்து விலகி சுதந்திர அரசாங்கத்தை அமைக்கலாமென்றும் அறிவித்தார். பிரெஞ்சு ஜனதிபதியின் மனமாற்றத்தால் அல்ஜீரியாவுக்கு சீக்கிரம் விமோசனம் பிறக்குமென்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனல் அல்ஜீரியாவிலுள்ள பிரெஞ்சு குடியேற்றக்காரர்கள், அல்ஜீரிய மக்களுக்குசுதந்தரம் கிடைத்தால், தங்களுக்கு எதிர்காலமே இல்லாமற்போகுமென்று கருதி, இராணுவப் புரட்சி செய்து, ஜெனரல் டிகால் ஆட்சியை நீக்கி, அல்ஜீரியாவின் பல பகுதிகளையும் ஆக்கிரமித்து, தங்கள் சொந்த ஆட்சியை ஏற்படுத்தியிருக்கிருர்கள். ஒண்டவந்த பிடாரி ஊர்ப்பிடாரியைத் துரத்தியதாம். அதுபோல் அல்ஜீரியாவில் குடியேறவந்தவர் அல்ஜீரியமக்களின் சுதந்திரத்துக்கு முட்டுக்கட்டைபோடுவதுடன், தாய்நாடான பிரான்ஸையே எதிர்த்துப்புரட்சிசெய்துள்ளனர்.

இப்புரட்சிக்காரர்கள், பிரான்ஸ்மீதும் படையெடுக்காமல் தடுக்க, ஜெனரல் டிகால் பிரான்ஸ் எங்கும் அவசரகால பிரகடனம் செய்து, பலத்த இராணுவப் பாதுகாப்புகளையும் செய்திருக்கின்ருர்.

பிரான்ஸிலும், ஏகாதிபத்தியசக்திகள் இன்னும் இருந்து வருகின்றன. இச்சக்திகளையெல்லாம் எதிர்த்து நின்று அடக்கவேண்டிய புதிய பிரச்சினை பிரெஞ்சு அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ளது. வால் இப்போது நாயை ஆட்டப் பார்க்கின்றது. இந்த வெறியர்களை அடக்கும்வேலை இப்போது பிரான்ஸுக்கே ஏற்பட்டுவிட்டது. பெரிய ஏகாதிபத்தியத்தைக் கட்டிய தால் பிரான்ஸ் இப்போது காணும் பலன் இதுதான்! இந்தப்புரட்சியால் அல்ஜீரிய மக்களின் கட்சி பெரிதும் பலப்பட்டுள்ளது.

## திராவிட நாடு இலட்சியம் ஊர்ஜிதம்

### தி. மு. க. தலைவர் கருத்து

தூத்துக்குடி, ஏப்ரல் 23

திராவிட முன்னேற்றக் கழகத்தின் நோக்கம், திராவிட நாட்டை அமைப்பதுதான் என்று, தலைவர் திரு. அண்ணத்துரை, பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் ஊர்ஜிதம் செய்தார்.

"தி. மு. க. விலிருந்து சில பிரிந்து சென்றிருக்கிருர்கள். அவர்களது கொள்கை என்னவென்று இன்னும் தெளிவாக்கப்படவில்லை. அது தெரிந்த பின்பே, அக்கட்சி பற்றிய கருத்தைக் கூறமுடியும்.

நான்கு மொழிப்பிரதேசங்களடங்கிய திராவிட சமஷ்டியை அமைப்பதே தி. மு. க.வின் இலட்சியம். விரும்பினல் எந்த உறுப்பினரும் அச்சமஷ்டியிலிருந்து பிரிந்து செல்லலாம். சமதர்ம முறையிலுள்ள சமுதாயத்தையே அந்த அமைப்பு அடிப்படையாகக் கொள்ளும்.

சமீபத்தில் தி. மு. க. வை விட்டுவிப் பிரிந்தவர்கள் கொள்கை வேற்றுமைக்காகச் செல்லவில்லை. கட்சி நிர்வாகத்தை திருத்திஅமைக்க முயன்றனர். 1000 பேர்கூட விலகவில்லை. இதுவரை 411 ராஜினமாக்கடிதங்களே கிடைத்தன. அதிலும் சிலர் மீண்டும் கட்சியில் சேருவதாகத் தெரிவித்துள்ளனர்.

தேர்தலில் மற்றக் கட்சிகளுடன் கூட்டுச் சேருவதுபற்றி பொதுக் கவுன்ஸில் மெம்பர்கள், தங்கள் கருத்தைத் தெரிவிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். தொகுதியிலுள்ளவர்களின் கருத்துக்கள் அறிந்தே முடிவு செய்யப்படும்."

திரு. சம்பத் தமது அறிக்கையில் கூறியுள்ள பல விஷயங்களைக் குறித்து திரு. அண்ணத்துரை தம் கருத்தைக் கூற மறுத்துவிட்டார்.

ஜெனரல் கவுன்ஸிலிலுள்ள மொத்தம் 149 பேர்களில் 103 பேர் அக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

கட்சி நோக்கங்களுக்கு மாருகப் பேசியும், எழுதியும் வருபவர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க, சபை, காரியதரிசிக்கு அதிகாரமளித்தது.

புதிய மறைமுகவரிகளைக் கண்டித்தும், சென்னைக்குத் "தமிழ்நாடு" என்ற பெயரை பூரணமாக அளிக்காததைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேறின.

### சென்னை கூட்டத்தில் 6 பேர் கைது

தமிழ் தேசியக் கட்சியின் ஆதரவில் சென்னை திலகர் கட்டிடத்தில் நடந்த பொதுக் கூட்டத்தில் யாரோ ஒருவர் ஒரு செருப்பை மேடைமீது வீசினர். கூட்டத்தில் கூச்சல் எழுந்தது.

திரு. ஈ. வி. கே. சம்பத் பலாத்காரம் கூடாதென்று

(4-ம் பக்கம் பார்க்க)

## தொடர்ந்து போராடவேண்டும்

### கென்னடி அறிவிப்பு

வாஷிங்டன், ஏப். 20

கியூபாவில்கம்யூனிஸ்டுகளின் தலையீட்டையும், ஆக்கிரமிப்பையும் மேற்கத்திய நாடுகள் "மேலும் உற்றுநோக்கவேண்டுமென" ஜனதிபதி கென்னடி வேண்டியுள்ளார்.

இங்கு நடைபெற்றஅமெரிக்க பத்திரிகை ஆசிரியர்கள் வருடாந்தமகாநாட்டில் பேசுகையில் ஜனதிபதி மேலும் குறிப்பிட்டதாவது:-

கியூபா, லாவோஸ், தென் அமெரிக்கா, ஆசிய நாடுகளில் எழுப்பப்படும் கம்யூனிஸ ஒலிகள் எதிர்காலத்தில், இதுவரை சுதந்திரத்துடன் வாழ்ந்த சமுதாயங்கள் யாவும் ஒழிக்கப்படநேரிடுமென்பதைத்தான் தெளிவுபடுத்துகின்றன. வலிமை பொருந்திய நாடுகள் மனத்திடத்துடன் போராடினல்மட்டுமே வாழமுடியும்.

கியூபாவில் நடைபெறுபவை பற்றி குடுப்பிடுகையில், முன்னரைப்போல "அத்துர்ப்பாக்கிய தீவில்" தேசாபிமானிகள், சர்வாதிகாரியின் ஆட்சிக்கு எதிராகப்போராடிவருகிருர்கள்.

## ஐயாறன் எழுதுவது

கோடை வெயில். தாங்கவில்லை. கொழும்பிலே வருணன் சக்கை போடு போடுவதாயும், வெள்ளம் கூட வரும் நிலை இருப்பதாகவும் பேப்பரில் படித்தேன்.

இங்கு வருணன் பல நாட்களாக வரவில்லை. ஊரடங்குச் சட்டத்துக்குப் பயந்துதான் வரவில்லையோ, அல்லது வேறென்ன காரணமோ? என்று ஏதேதோ எண்ணினேன். மத்தியானம் 3 மணிக்கு 'படபட' என்று வந்து ஒரு பாட்டம் அடித்து, ஊரெல்லாம் குளிர்ச்சி செய்துவிட்டுச் சென்ருன்.

* * *

மழை எவ்வளவு அடித்தாலும் தாங்கலாம். வெயில்தான் சகிக்க முடிவதில்லை. வெயில் கடுமையாகும் போது, நமக்குக் கோபம் கூட அதிகம் வருகிறது. சிலருக்கு மூளை கொதிப்பு வந்து, ஏதேதோ செய்கிருர்கள்.

பாரதூரமான குற்றங்கள் கூட, மழைகாலத்தைவிடக் கோடை காலத்தில்தான் அதிகம் நடக்கின்றனவாம்.

இலங்கைக்கு வருணன் வந்து, குளிர்ச்சி செய்துள்ளதால், இங்கு குற்றங்கள் குறையவும், அரசியல் வாதிகள் நிதானமாக யோசித்து, இப்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியைச் சுமுகமாகத் தீர்க்கவும் சூழ்நிலை உதவியாக இருக்கும்.

* * *

நேற்றுக் காலை ஓர் அன்பர் வந்தார். 'ஊரடங்குச் சட்டக் காலத்தில் வீட்டிலே விளக்கு ஏற்றலாமா? கூடாதா? விளக்கு எரிந்த வீட்டுக்குள் வந்து, அதை அணைக்கும்படி ஓடர் போடுகிருர்களே! விளக்கேற்றக் கூடாதென்று உத்தரவு இருக்கிறதோ?' என்று கேட்டார். இதே மாதிரி வேறு சில அன்பர்கள் புகார் தெரிவித்தனர்.

இதைப்பற்றி இராணுவக் காரியாலயத்தை விசாரித்தேன்.

"இப்போது விளக்கணைப்பு உத்தரவு எதுவும் இல்லை. விளக்கை நன்ருக ஏற்றிவைக்கலாம். அது சட்டவிரோதமல்ல" என்ருர் அங்குள்ள அதிகாரி.

ஆனல் சில இராணுவ வீரர்கள் வீட்டுக்குள்ளும் சென்று விளக்கை அணைக்குமாறு ஓடர் போடுகிருர்களாம் என்று கூறினேன்.

தங்களுக்கும் இவ்வித புகார்கள் கிடைத்திருப்பதாயும் விளக்கை அணைக்குமாறு கேட்கப்படாதென்று இராணுவத்தினருக்கு உத்தரவிட்டுள்ளதுடன் இனி அவ்விதம் நடவாமல் கண்டிப்பான நடவடிக்கை எடுப்பதாகவும் அதிகாரி கூறினர்.

* * *

பொதுமக்கள் பல பல புகார்கள் கூறுகிருர்கள். யாரிடம் முறையிடுவதென்று தெரியவில்லை.

இராணுவத் தலைமைக் காரியாலயம் சென்று மேலதிகாரிகளிடம் முறையிடுவதென்பது பொதுமக்களில் பலருக்கும் முடியாத காரியம்.

நேற்று நான் இராணுவ காரியாலயத்துக்கு டெலிபோன் பேச பலமுறை முயன்றேன். "எங்கேஜ்ட்" ஆகவே இருந்தது. இரண்டு மணி நேரத்துக்குப்பின்தான் அதிகாரியுடன் பேசமுடிந்தது.

சட்ட மறுப்பு நடந்தகாலத்தில் இந்தியாவிலே கட்சி அரசியலில் கலப்பில்லாத, பொறுப்புவாய்ந்த பிரமுகர்கள் அடங்கிய "மக்கள் அடிப்படை உரிமைக் குழு" அமைத்து அதன்மூலம் அதிகாரிகளுக்கு முறையிட்டு மக்களின் வீண்

(4ம் பக்கம் பார்க்க)

# மாநகரசபையின் அத்தியாவசிய சேவைகள்

## திருப்திகரமாக நடைபெறுகின்றன

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் குடிதண்ணீர் விநியோகம் வழமைபோல் சீராக நடைபெறுகிறது. இம்மாதம் 18-ம், 19-ம் திகதிகளில் மட்டும் தண்ணீர் விநியோகம் சிறிது தடைப்பட்டது. நல்லூர் கிராமச்சங்கப் பகுதியில் மின்சாரவிநியோகம் தடைபட்டதன் காரணமாகவே தண்ணீர் விநியோகம் தடைபட்டது,

வீடுகளுக்கு மின்சார விநியோகம் 18ம், 19ம், திகதிகளில்கூட தடைபடாமல்சீராக இருந்தது. வீதிகளில் மின்சாரவிளக்குகள் 18ம், 19ம் திகதிகளில் குறைவாக இருந்ததுடன் 20-ந் திகதி வீதி விளக்குகள் இருக்கவில்லை. ஊரடங்குச்சட்டம் அமுலிலிருக்கும் போது வீதிகளில் விளக்கு வெளிச்சம்இருக்கக்கூடாதென மின்சாரஇலாகாஉத்தியோகத்தர்கள் கருதியதே இதற்குக் காரணம். 21-ந் திகதி தொடக்கம் வீதிவிளக்குகள் வழமைபோல்சேவைசெய்ய ஆரம்பித்தன.

நகரசுத்திவேலைகள் இம்மாதம் 18-ம், 19-ம், 20-ந்திகதிகளில் நடைபெறவில்லை. 21-ந் திகதி தொடக்கம் நகரசுத்தி வேலைகள் வழமைபோல் நடைபெற்றுவருகின்றன.

மாநகரசபைக் காரியாலயத்தில் உத்தியோகத்தர்கள் எல்லோரும் வேலைசெய்கிருர்கள். ஊரடங்குச்சட்டம் அமுலாகும் நேரத்துக்கு முன் உத்தியோகத்தர்கள் தங்கள் இடங்களுக்குத் திரும்ப வேண்டியதால் காரியாலயம் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பாக மூடப்படுகிறது.

ரஸ்தா வேலைகள் வழமைபோல் நடைபெறுகின்றன. அத்தியாவசிய சேவைகள் யாவும் திருப்திகரமாக நடைபெறுகின்றன.

மாநகரசபை ஆணையாளர் திரு. ஏ. வி. சின்னையா சகல வேலைகளையும் கவனித்து வருகிருர்.

## கண்ணகை அம்மன் கோயில் திருவிழா

புங்குடுதீவு, ஞாயிறு

புங்குடுதீவு ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி (கண்ணகை) அம்பாள் கோயில் திருவிழா சென்ற வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. இம்மாதம் 30-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை ரதோற்சவமும் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

### புதிய பரிபாலன சபை

புங்குடுதீவு கண்ணகை அம்மன் கோவில் பரிபாலன சபையின் வருடாந்தக் கூட்டம் உபதலைவர் திரு. சி. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது.

புதிய பஞ்சாயத்தாராக திரு. ப. கதிரவேலு தெரிவுசெய்யப் பெற்ருர். ஆலயபரிபாலனசபை உத்தியோகத்தர் தெரிவில் பின்வருவோர் தெரிவுசெய்யப் பெற்றனர்.

தலைவர்–பிரம்ஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்கள், உபதலைவர்கள் திரு. சி. ஆறுமுகம், திரு. வீ. வ. நல்லதம்பி, இணைக்காரியதரிசிகள் திரு. சி. சின்னத்துரை, திரு. க. தாமோதரம்பிள்ளை, தனதிகாரி திரு. சோ. க. ஐயம்பிள்ளை.

## தலையிடுவது எந்த ஜேர்மனி?

கொழும்பு, ஏப் 24

'இலங்கை என்ன செய்ய வேண்டுமென்றும் என்ன செய்யக்கூடாதென்றும் மேற்கு ஜெர்மனி இலங்கையிடம் கூறுமானல் அது இலங்கையின் அலுவல்களில் ஜெர்மனி தலையிடமுடியும்' என்று கிழக்கு ஜெர்மன் வெளி நாட்டு வர்த்தக உதவி மந்திரி திரு. ஹேர் காட்விஸ் பத்திரிகை நிருபர்கள் மாநாட்டில் கூறினர்.

'கிழக்கு ஜெர்மனியுடன் இலங்கை வர்த்தகத் தொடர்பு வைத்துக்கொண்டால் அது கிழக்கு ஜெர்மனியின் உள்விவகார அலுவல்களில் தலையிடுவதாக இருக்குமென்று மேற்கு ஜெர்மன் பார்லிமெண்ட் தூதுக் கோஷ்டி கூறியதைப் பற்றி ஒரு நிருபர் குறிப்பிட்டுக் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே திரு. விஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உணவு வர்த்தக கப்பல் போக்குவரத்து மந்திரியுடன் தாம் செய்து கொண்ட ஒப்பந்தத்தைப்பற்றிக் குறிப்பிடுகையில் வர்த்தகத்தை வளர்ப்பதுவே தமது அரசாங்கத்தின் நோக்கம் எனக் கூறினர்.

# பிரிந்து செல்லும் உரிமையுள்ள சமஷ்டி தமிழ்நாடு

## புதியகட்சிபற்றி சம்பத் விளக்கம்

சென்னை, ஏப்ரல் 23

"மத்திய அரசாங்கத்திடம் அதிகாரங்கள் குவிந்திருக்காமல் குறைந்த பட்ச அதிகாரங்கள் மட்டுமே அதனிடம் இருக்கும் சமஷ்டிக் குடியரசு ஏற்பட வேண்டும். இந்தக் குடியரசின் சுயாட்சி உறுப்புகளுக்கு யூனியனிலிருந்து பிரிந்து செல்லும் உரிமை இருக்க வேண்டும். அரசியல் சட்டத்தில் இதற்கான தீவிரமான மாறுதல்களைச் செய்ய வேண்டும்" என்று சமீபத்தில் திரு. ஈ. வி. கே. சம்பத் நிருபர்களிடம் தெரிவித்தார்.

தி. மு. க. விலிருந்து வெளியேறியவர்கள் அமைத்துள்ள தமிழ் தேசியக் கட்சியின் அரசியல் நோக்கங்களை அவர் விளக்குகையில், "சமஷ்டி அமைப்பு, பிரிந்து போகும் உரிமை ஆகிய இரு பாதுகாப்புகளே இந்த உபகண்டத்தின் பிரதேச அரசியல் ஐக்கியத்தைப் பாதுகாப்பதற்கான வழி. காங்கிரஸ் முயற்சி செய்வதுபோல், செயற்கையான தேசிய ஐக்கியத்தைத் திணிப்பதன் மூலம் அவைகளைப் பாதுகாக்க முடியாது" என்று அவர் கூறினர்.

சுயேச்சை திராவிட நாடு என்பது இப்போதுள்ள நிலைமையில் காரியசாத்தியமானதல்ல; அதுமட்டுமின்றி பிரத்யட்ச நிலைமையை உணரும் எவரும் அக்கருத்தைத் தொடர்ந்து ஆதரித்து வர முடியாதென்றும் கேரளம், ஆந்திரம், கர்னடக மக்கள் சுயேச்சை திராவிட நாடு கருத்தை ஆதரிக்கவில்லையென்றும் எனவே இது தமிழர்கள் கொண்ட இலட்சியமாக மட்டுமே உள்ளது என்றும் திரு சம்பத் தெரிவித்தார்.

தமது புதுக் கட்சியின் நிலையை விளக்கி திரு. சம்பத் மேலும் கூறியதாவது:-

சகல வரி விதிப்பு, வருமான அதிகாரங்களும் ராஜ்யங்களிடம் இருக்க வேண்டும். அகில இந்திய விவகாரங்களுக்கான பொது நிதியை ஏற்படுத்தி அதற்கு ராஜ்யங்கள் மான்யங்கள் வழங்கலாம். இதுதான் இந்தியாவுக்குத் தேவையான உண்மையான சமஷ்டி அமைப்பு. இக்கருத்துக்கு முன்னேடியான தமிழ்நாடு, தனது இலட்சியத்தைப் பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய பூரண சுயாட்சியை அடையும்.

திராவிடநாடு என்பது பகற்கனவாகிவிட்டதால், எங்கும் பரவியுள்ள மொழி வழி அரசுரிமைப் போக்கைத் திருப்தி செய்விக்கக் கூடிய மாற்று வழியைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்.

புதுக்கட்சியின் பொருளாதாரக் கொள்கைகள் பற்றி திரு. சம்பத் கூறுகையில் "அது முற்போக்குத் தன்மை வாய்ந்தது. ஆனல், நெகிழ்ச்சியுடன் கூடியது என்றும் காங்கிரஸிலும் சுதந்திரக் கட்சியிலும் உள்ள வலதுசாரி சக்திகளைத்தமது கட்சி எதிர்க்கும் என்றும் அவர் கூறினர்.

தமிழ்நாட்டைப் பாதிக்கும் முக்கியமான பிரச்சினைகளைத் தீர்ப்பதில் மற்றக் கட்சிகளின் ஒத்துழைப்பைப் பெறத் தன் கட்சி முயற்சி செய்யும் என்றும் இதன் சாத்தியக் கூறுகளை ஆராய்வதற்காகத் தன் கட்சியைப் போன்ற கருத்துள்ள மற்றக் கட்சிகளின் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்போவதாகவும் திரு. சம்பத் கூறினர். திராவிடக் கழகம், தமிழரசுக் கழகம், நாம் தமிழர் கட்சி ஆகியவற்றின் பெயர்களை அவர் குறிப்பிட்டார்.

ஹிந்தி விஷயத்தில் தி. மு. க.வுக்கும் தங்களுக்கும் அதிக கருத்து வேற்றுமை கிடையாது என்றும் ஹிந்தி திணிப்பதைத் தனது கட்சியும் எதிர்க்கும் என்றும் கூறினர்.

ஜாதிபேதமின்றித் தமிழ் நாட்டைச் சேர்ந்த யார் வேண்டுமானலும் புதுக் கட்சியில் சேரலாம். ராஜ்யத்தின் தொழில் விருத்தியில் எங்கள் கட்சிக்கு அக்கறை உண்டாகையால் வட இந்தியரோ, அந்நியரோ இங்கு தொழில்களை ஆரம்பிப்பதை எங்கள் கட்சி எதிர்க்காது என்று திரு. சம்பத் கூறினர்.

## 'கல்வி முன்னேற்றத்துக்கு எல்லோரும் உழைக்க வேண்டும்'

உடுப்பிட்டி, திங்கள்

"கல்வியின் முன்னேற்றம் ஆசிரியரில்மட்டும் தங்கியிருக்கிறதென்பது தவறு. மாணவர்,பெற்ருர் பழையமாணவர்அனைவரும்சேர்ந்துஉழைப்பதனுலேயே கல்வியின் தரம் உயர முடியுமென்பதைப் பிறநாட்டுக் கல்விச் சாதனைகள் நமக்கு நினைவுறுத்துகின்றன" இவ்வாறு நேற்று முன்தினம் கரவெட்டி •விக்னேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்கக் கூட்டமொன்றில் தலைமை வகித்துப் பேசிய மேற்படி கல்லூரி அதிபர் திரு. கே. சிவப்பிரகாசம் கூறினர்.

கல்லூரியின் பொது நலச் சபைக்கு அங்கத்தவரைத் தெரிவு செய்யுமுகமாக இக் கூட்டம் கூட்டப்பட்டது.

மேலும் அவர் கூறியதாவது:- "இப்படியான சபைகளில் பட்டம் பதவிக்காகப் பரிதவிப்பவர்களும், சுய்நல முள்ளோரும், பொதுப் பணத்தைத் தனியுடமையாக்குவோரும் அங்கத்துவம் வகிப்பது, இச்சபையின் அடிப்படைக் குறிக்கோளை முறியடிப்பதாகும்" சபை அங்கத்தவராகப் பழைய மாணவரிலிருந்து ஆறு பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

## இளைஞர் விவசாயக் கழகம்

உரும்பராய், ஏப் 24

உரும்பராய் இளைஞர் விவசாயக் கழகத்தின் விசேஷ கூட்டம் சமீபத்தில் கூட்டப்பட்டது.

செல்வன் சி. கதிரவேலு கழகத்தின் இவ் வருடத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## மாதர் முன்னணி மகாநாடு

கல்லடி உப்போடை, ஏப் 24

"நாடு முன்னேற வேண்டின் பெண் குலம் பாடுபட வேண்டும். ஆண்களுடன் நாமும் பாடுபட்டால்தான் நல்லதொரு சமுதாயத்தை உருவாக்க முடியும். பெண்கள் கோழி, தேனீ முதலியன வளர்ப்பதோடு தையல் வேலைபோன்ற சிறு கைத்தொழில்களையும் பேணி வளர்க்க வேண்டும்".

இவ்வாறு 'கல்லடி உப்போடை மகளிர் முன்னணி' ஆண்டுக் கூட்டத்தில் பேசுகையில் திருமதி தெ. தங்கத்துரை குறிப்பிட்டார். கூட்டத்துக்கு திருமதி, த. அருளம்பலம் தலைமை தாங்கினர். நடப்பு வருட உத்தியோகஸ்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்: திருமதி த. அருளம்பலம், தலைவர்: திருமதி தெ. தங்கத்துரை, உபதலைவர்: அ. கந்தையா, இணைச் செயலாளர்: திருமதிகள் த. பொன்னையா, சொ. சிவலிங்கம், தனதிகாரி: திருமதி த. பொன்னையா.

## அங்கோலாவில் 40 பேர் கைது

அங்கோலா

வடக்கு அங்கோலாவில் நேற்று 40 ஆபிரிக்கர்கள் கைது செய்யப்பட்டனர்.

## தீ விபத்தில் ரூ. 50 ஆயிரம் நஷ்டம்

சென்னை, ஏப்ரல் 23

வடஆர்க்காடு மாவட்டத்தில் ஒற்பட்ட இரு தீவிபத்துக்களின் காரணமாய் 50,000 ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருப்பதாய் அறிவிக்கப்பட்டது.


### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தர வாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 10-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணுநந்தர்,
கைலாசபிள்ளையார் கோவிலடி.
Advt. 91 யாழ்ப்பாணம்.

### புற்று நோய் (Cancer) மாறுதற்கு

"யோகீஸ்வர ரசம்" உபயோகியுங்கள்.

புற்று நோயை வேரறுக்கும் அரியஆயுள் வேத மருந்து. பல்லாண்டுகளாக செயல் மூலம் நிரூபிக்கப்பட்டது. இந்நோயால் பீடிக்கப்பட்டோர் நேரில் வந்து கலந்து ஆலோசிக்கவும்.

பொ. செல்லையா
ஆயுள் வேத வைத்தியர்
Advt. 110 கந்தர்மடம்.

### திருமண அழைப்பு

பைனல் கடைச்சல் தொழிற்சாலை அதிபர் எம். எஸ். மூர்த்தி அவர்கட்கும் ரீ. புவனேஸ்வரி அவர்கட்கும் சித்திரை மாதம் 14-ந் திகதி (26-4-61) புதன் கிழமை இரவு 3 மணியளவில் வரும் சுபமுகூர்த்தத்தில்திருமணம் நடைபெறும். நண்பர்களும் உறவினர்களும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை எதிர்பார்க்கும்
வி. முத்துவும் பாரியாரும்
சண்டிலிப்பாய் மத்தி.

### திருமண அறிவித்தல்

மணமகன்–வ. வேலுப்பிள்ளை (கிருஷிக உ. உ. மேற்பார்வையாளர், கிருஷிகப் பாடசாலை, திருநெல்வேலி)

மணமகள்– த. இராமதிலகம் c/o வ. தருமலிங்கம் (இ. போ. ச.) வல்வெட்டித்துறை.

சுபநேரம்: (26-4-61) புதன் கிழமை காலை 6-01—7-07.

இடம்: செல்வச்சந்நிதி கோவில், தொண்டைமானறு.

குறிப்பு: உறவினர்களும், நண்பர்களும் இவ் அறிவித்தலை தயது செய்து ஏற்றுக்கொள்ளவும். தனித்தனி அழைப்பிதழ் அனுப்பாததற்கு மன்னிக்கவும்.

இங்ஙனம்
தி. வேலுப்பிள்ளையும்
பாரியாரும்

ஈஸ்வரி வாசா
சிவன்கோவிலடி,
வல்வெட்டித்துறை.

Advt 123

### புதுமனைப் பிரவேச அழைப்பிதழ்

அன்புடையீர்,

இடம்: திருவருள் அகம். குரு வீதி, காங்கேசன் துறை.

காலம்: 28-4-61 இரவு 7-22—9-25.

உபசரிப்பு: நான்கு நாட்கள்.

தங்கள் நல்வரவை நாடும் அப்பாப்பிள்ளை இராசநாயகம். (ஆசிரியர் அ. மி. பாடசாலை, வருத்தலைவிளான்) திருமதி நாகம்மா இராசநாயகம் (ஆசிரியை, நடேஸ்வரக் கல்லூரி K. K. S.

Advt 122

### தெய்வ வழிபாட்டிற்கும்

உங்கள் இல்லங்களில் நறுமணம் கமழ்வதற்கும்

33
303 ஊதுபத்திகளை
3003

உபயோகியுங்கள்.

யாழ்ப்பாணத்தில் ஸ்டாக்கிஸ்டுகள் தேவை.

தயாரிப்பவர்கள்:

எஸ். வி. முருகேசன் அன் சன்ஸ்,
பெங்களூர்–2.

சோல் ஏஜண்டுகள்:

ஜெகஜோதீ அன் கோ.
குருதெனிய.

# மட்டக்களப்பு - கொழும்பு புதிய பாதை அமைப்பு

மட்டக்களப்பு, திங்கள்

மிகப் பிற்போக்கான அலுத்நுவரைப் பகுதியை மற்றப் பகுதிகளுடன் இணைக்கும் நோக்கமாக அமைக்கப்படும் பாலம் ஏற்கனவே முடிவடைந்துவிட்டது. அலுத்நுவரை-பதியத்தலாவை வீதியமைக்கும் வேலை விரைவாக முடிவடைந்துவருகிறது. 22 மைல் நீளமான இவ்வீதி முடிவடைந்தால் கொழும்பு-மட்டக்களப்புப் பிரயாணம் 72 மைல் குறைவதுடன் வருடம் முழுவதும் பிரயாணஞ் செய்யக்கூடியதாகவிருக்கும். இவ்வீதியும் பாலமும் அமெரிக்க அரசாங்கத்தின் உதவியுடன் அமைக்கப்பட்டுவருகிறது.

---

## திராவிட நாடு

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கூறியதுடன் தமது கட்சியின் நோக்கத்தையும் விளக்கினர்.

பலர், தி. மு. க.வைக் குறை கூறிப் பேசினர். அக்கூட்டத்தில் குழப்பம் விளைவித்ததாகக் கூறி, லட்சுமிபதி உள்ளிட்டு 6 தி. மு. க. அனுதாபிகளைப் பொலிசார் கைது செய்தனர்.

---

## ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கஷ்டங்களைக் குறைக்க ஏற்பாடு செய்திருந்தனர்.

அதேபோல இங்கும் இச்சமயம் அவ்வித குழுவை நியமித்தால் மக்களுக்கு வீண் கஷ்டங்கள் ஏற்படாமலும் நெருக்கடி அதிகரிக்காமலும் தடுக்கப் பெரிதும் உதவியாக இருக்குமல்லவா?

**தேவை**

யாழ்ப்பாணம் "டில்கா ஐஸ் கிரீம் கம்பெனி" யில் உணவு பரிமாறும் 'வெயிட்டர்கள்' தேவை. உடன் விண்ணப்பிக்கவும்.

மனேஜர்,
டில்கா ஐஸ் கிறீம் கம்பெனி,
202, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

## யாழ்ப்பாண மாவட்டம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

**இராணுவ காரியாலயத்தை இதைப்பற்றி விசாரித்ததில், ஊரடங்குச் சட்டம் யாழ்ப்பாண மாவட்டமனைத்திலும் அமுலில் இருப்பதாக மேஜர் வான்ரைக் அறிவித்தார்.**

சாவகச்சேரியில் ஊரடங்குச் சட்டம் மத்தியானம் 3 மணிக்கு அமுலுக்கு வருகின்றதா? என்று மற்றோர் அன்பர் கேட்கின்றார். இது தவறென்றும் சாவகச்சேரியிலும் மற்ற இடங்களைப்போலவே ஊரடங்குச் சட்டம் மாலை 6 மணிக்கு அமுலுக்கு வருவதாகவும் அதே அதிகாரி தெரிவித்தார்.

---

## ஜெனரல் டிகாலுக்கு

(1ம் பக்கத்தொடர்ச்சி)

பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

விசேஷ அதிகாரங்களைத் தன்வசம் எடுத்துக் கொண்டுள்ள பிரஞ்சு ஜனாதிபதி டிகோல் தம்முடன் ஒத்துழைக்குமாறு மக்களை வேண்டிக்கொண்டார். தனது பதவிக்காலம் முடிந்தாலும் நாட்டுக்காகத்தான் போராடப் போவதாக அவர் தெரிவித்தார்.

பிரஞ்சு பிரதமர் திரு. டாபரே டெலிவிஷனில் நிலைமையை விளக்கிப் பேசினர்.

உடனுக்குடன் நிலைமையை அறிவிக்குமுகமாக ரேடியோ, டெலிவிஷன் நிலையங்கள் 24 மணி நேரமும் நிகழ்ச்சிகளை ஒலிபரப்பிக்கொண்டிருந்தன.

கலகக்காரர்களின் நடமாட்டம் காணப்பட்டால் உடனே அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் அல்லது இராணுவ முகாமுக்கு அறிவிக்குமாறு டெலிவிஷன் அறிவிப்பாளர், பிரஞ்சு பிரதமர் பேசி முடிந்ததும் தெரிவித்தார்.

அல்ஜீரியாவைக் கைப்பற்றியுள்ள புரட்சித் தலைவர்களில் ஒருவரான மேஜர் சாலே அல்ஜியர்ஸ் வானொலி மூலம் விடுத்த அறிக்கையொன்றில் அல்ஜீரிய தேசிய வாதிகளுக்கு எதிரான போராட்டம் தீவிரப்படுத்தப்படுமெனத் தெரிவித்தார்.

## இந்தியச் செய்திகள்

பாரத பிரதேச உரிமை பற்றியும், எல்லைபற்றியும் எதிராகப் பேசும் அல்லது எழுதும் செயலுக்கு, 3 வருடக் கடுங்காவலும் அபராதமும் விதிக்கப்படவேண்டுமென்ற ஒரு மசோதா லோக சபைக்கு வந்திருக்கிறது.

∴ ∴ ∴

உல்லாச யாத்திரைபற்றிய 8நாள் மகாநாடு, இன்று புதுடில்லியில் ஆரம்பமாகியது. திரு.நேரு மகாநாட்டை ஆரம்பித்து வைத்தார்.

∴ ∴ ∴

அண்ணமலை சர்வ கலாசாலையின் உப வேந்தரான. நாராயணசாமிபிள்ளை சமீபத்தில் ஓய்வு பெற்றபின், அவருக்குப் பதிலாக திரு, மு. சுப்பிரமணியம் அப்பதவிக்கு நியமிக்கப்படவிருக்கிறார்.

∴ ∴ ∴

நெய்வேலித் திட்டம், வருகிற அக்டோபர் 1ந்தேதி முதல் மின்சாரம் சப்ளை செய்யுமென அறிவிக்கப்பட்டது.

∴ ∴ ∴

சென்னை றெஜிமன்டைச் சேர்ந்த மேஜர் பாஸ்கரன் தன் தீரச்செயலுக்காக 2ம் வகுப்பு அசோகச் சக்கர விருதைப் பெறவிருக்கிறார்.

---

## டெஹ்ரான் விமானதளம்

### அமெரிக்காவுடன் இனி ஒப்பந்தம் இல்லை

அம்மான் (ஜோர்டான்)

டெஹ்ரான் விமானத்தளம் சம்பந்தமாக அமெரிக்காவுடன் சாஊதி அரேபியா செய்துள்ள ஒப்பந்தத்தைப் புதுப்பிக்க சாஊதி அரேபிய அரசாங்கம் விரும்பவில்லை. இத்தகவலை மெக்கா ரேடியோ ஒலிபரப்பியது. ஒப்பந்தத்தைப் புதுப்பிப்பதில்லையென்ற முடிவை நாட்டின் நலனை முன்னிட்டுச் செய்யவேண்டிய அவசியம்ஏற்பட்டதாக மன்னர்சாஊத் தெரிவித்ததாக ரேடியோ அறிவித்தது.

---

## கைத்தொழில் நிர்வாகத்தில் தொழிலாளர்

நிர்வாகத்துடன் தொழிலாளர் பிரதிநிதிகளையும்சேர்த்துக் கொள்ளவேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டதென்று, கூர்ஜர முதல்மந்திரி டாக்டர் ஜீவராஜ் மேத்தா ஆமதாபாத்தில் அ. இ. கைத்தொழில் முதலாளிகள் ஸ்தாபனத்தை ஆரம்பித்து வைக்கையில் கூறினர்.

டாக்டர் மேத்தா மேலும் கூறியதாவது:-

இப்போது தொழிலாளரில் பலர் முற்றிலும் படிப்பில்லாதவர்கள். தொழிற்சங்கங்களைப் பற்றிய அறிவும் அதிகமில்லை. அவர்களில் சிலராவது நன்கு கல்விகற்காவிடில், நிர்வாகத்திலே தொழிலாளர் சேர்த்துக் கொள்ளப்படுவதில் பயனில்லை"

---

## டெலிவிஷனில் காஸ்ட்ரோ

ஹவானா, ஏப். 24

கியூபாவில் தோன்றிய கிளர்ச்சியை அடக்கியபின் கியூபா பிரதமர் திரு. பிடல் காஸ்ட்ரோ நேற்று முதல் தடவையாக டெலிவிஷனில் தோன்றினர்.

கியூபாவின்மீது கலகக்காரர்கள் கிளர்ச்சி நடத்த அமெரிக்கா உதவி புரிந்ததென்ற குற்றச்சாட்டை திரு. பிடல் காஸ்ட்ரோ மீண்டும் வற்புறுத்தினர்.

லாவோஸ்

# சர்வதேச கமிஷனைக் கூட்ட இந்தியாவுக்கு வேண்டுகோள்

புதுடில்லி, ஏப்ரல் 2[illegible]

**லாவோஸ் சர்வதேசக் கமிஷனைக் கூட்டும்படி இன்று பிரிட்டனும் ரஷ்யாவும் இந்தியாவைக் கேட்டுக் கொண்டன. உடனடியாக அதைக் கூட்ட பிரதமர் நேரு சம்மதம் தெரிவித்தார்.**

இன்று புதுடில்லியில் பிரிட்டிஷ், ரஷ்ய தூதர்கள் சந்தித்துப் பேசியபின் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இரு தூதர்களும் பார்லிமெண்ட் கட்டிடத்திற்கு வந்து பிரதமர் நேருவைச் சந்தித்துப் பேசினர்கள்.

அடுத்தமாதம் 12-ம் தேதி ஜெனிவாவில் நடைபெறவிருக்கும் 14 நாடுகள் மகாநாட்டில் பாரதமும் கலந்து கொள்ள வேண்டும்எனக்கேட்டுக்கொள்ளப்பட்டது.

போர் நிறுத்தம் உடனே அமுலுக்கு வருவது பற்றி லண்டனிலும், மாஸ்கோவிலும் ஏக காலத்தில் அறிக்கைகள் வெளியிடப்படும் என நிருபர்களிடம் பேசிய ரஷ்யத் தூதர் கூறினர்.

---

## ஆயுள்வேத வைத்திய ஆராய்ச்சி நிலையம்

### சிவசர்மா ஆலோசகராக நியமிக்கப்படுவார்

கொழும்பு, திங்கள்.

நாவின்னையில் செப்டம்பர் மாதத்தில் திறக்கப்படவிருக்கும் ஆயுள்வேத வைத்திய ஆராய்ச்சி நிலையத்தில் ஆலோசகராகக் கடமையாற்ற இந்திய ஆயுள்வேத வைத்திய நிபுணர் டாக்டர் சிவசர்மாவை இலங்கை அரசாங்கம் அழைத்துள்ளது.

செப்டம்பர்மாதம் 25ந்திகதி நடைபெறவிருக்கும் இந்நிலயத்தின் திறப்பு விழாவிற்கு பாரதப் பிரதமர் ஸ்ரீநேருவை இலங்கைப் பிரமதர் அழைத்துள்ளார்.

---

## மாஸ்கோ சென்றார்.

கொழும்பு, ஏப்ரல் 24

பொரளை எம். பி. திரு. டபிள்யு. டி. டி. சில்வா, மாஸ்கோவில் நடைபெறும் மேதின விழாவில் கலந்து கொள்ளும் பொருட்டு ரஷ்யா புறப்பட்டுள்ளார்.

---

## 7 கட்டமுள்ள புதிய ராக்கட்

### வானவெளிக்கு அமெரிக்கா அனுப்பியது

வாஷிங்டன், ஏப். 24

ஏழு கட்ட ராக்கட் ஒன்றை அமெரிக்கா வானவெளிக்கு முதல்தடவையாக அனுப்பியுள்ளது. இந்த ராக்கட்டின் நான்கு கட்டங்கள் குறிப்பிட்ட தூரத்துக்குச் சென்றதும் பூமிக்குத் திரும்பக்கூடியதாக அமைக்கப்பட்டுள்ளது.வானத்திலிருந்து பூமியில் விழும் "விண்கல்" போன்று செயற்கை விண் கல் ஒன்று இந்த ராக்கட்டில் வைத்து அனுப்பப்பட்டது. நான்கு கட்டம் தனியாகப் பிரிந்ததும் இந்த விண்கல் சுமார் 25,000 மைல் வேகத்தில் பூமியைநோக்கி வந்தது.

---

## இளவரசர் சுவர்ணபூமா

பீகிங், ஏப்ரல் 24

ஜெனிவாவில் லாவோஸ் சம்பந்தமான சர்வதேசமாகாநாடு சீக்கிரம் ஆரம்பிக்குமெனத் தாம் எதிர்பார்ப்பதாய் இளவரசர் சுவர்ணபூமா இன்று கூறினர்.

---

## பிரிட்டிஷ்-ரஷ்ய தூதர்கள் பேச்சு

புதுடில்லி,ஏப்ரல் 24

புதுடில்லியிலுள்ள பிரிட்டிஷ் ஹைக்கமிசனர், அங்குள்ள சோவியத் ஸ்தானிகரைக் கண்டு பேசினர். லாவோஸ் சம்பந்தமாக இந்தியாவுக்கு இரு நாடுகளும் கூட்டு வேண்கோள் விடுவிப்பது பற்றி அவர் பேசியதாகக் கூறப்படுகிறது.

போன்: 585 தந்தி: மன்சூரு

நங்கையர் விரும்பும் அழகிற் சிறந்த
நகைகள், வைரங்களுக்கு



சிறந்த ஸ்தாபனம்

கே. என். எம்.
மீருன் சாஹிப்
கன்னதிட்டி யாழ்ப்பாணம்

இலங்கையில் புகழ்பெற்ற
R. P. S. கோப்பித்தூளையே
எப்பொழுதும் உபயோகியுங்கள்.

குணத்திலும் மணத்திலும் சிறந்தது
R. P. S. கோப்பித்தூள்.

எங்களிடம்

- கடுகு
- மிளகு
- கொச்சிக்காய்
- பலசரக்குச் சாமான்கள்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

விபரங்களுக்கு:
ரஹ்மான் புரடியூஸ் ஸ்டோர்ஸ்
22, 26, பழையசோனகத் தெரு,
கொழும்பு-12.
Advt. 86 டெலிபோன்: 6146

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது

№ 6439